E.A.No. 13/2022 in E.P.No: 34/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்.10.12.2024

ம.சா.1 – சீதாலட்சுமி க/பெ – பாலமுருகன்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் பி.எஸ்.சி படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மனு பாரா – 4ல் உள்ள விபரத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2022ம் ஆண்டு நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஊழியர்கள் எனது இடத்தை விட்டு காலி செய்ய சொன்ன போது தான் தெரிந்து கொண்டேன். 2022ல் விபரத்தை தெரிந்து கொண்ட நான் மனு சொத்து சம்மந்தமாக தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல்செய்துள்ள மனுவில் சொல்லப்பட்டுள்ள அ.வ.எண்.47/11 என்ற வழக்கில் 24.02.2017 மற்றும் 06.07.2017ம் தேதிகளில் தீர்ப்பளிக்கப்பட்டது சம்மந்தமாக நான் கிரையம் பெற்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் விபரம் கேட்டேன், ஆனால் அவர்கள் சரியாக பதில் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் நான் கிரையம் பெற்ற மனு சொத்து எனக்கு வேண்டும் என்று கேட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சொத்தை நிறைவேற்றுதல் மனுவில் இருந்து விடுவித்து கொடுக்கும் படி கேட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தில் உரிமை பிரச்சனை இருப்பதால் நான் தனியாக விளம்புகை பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், நிறைவேற்றுதல் மனுவில் மனு

சொத்தை விடுவித்து கொடுக்க சட்டப்படி கோர முடியாது என்றால் சரியல்ல. மனு சொத்தை நான் 2015 ம் ஆண்டு கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்கும் போது மனு சொத்தில் வில்லங்கம் பார்த்து வாங்கினேனா என்றால் வில்லங்கம் பார்த்தேன், எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை வில்லங்கம் பார்த்தேன் என்றால் அது எனது கணவருக்கு தான் தெரியும். அது சம்மந்தமாக அவரை விசாரித்தால் அந்த விபரம் தெரியவரும் என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. நான் கிரையம் வாங்கும் போது வில்லங்கம் போட்டு பார்த்திருந்தால் இந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்தை கிரையம் வாங்கும் போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் சென்று மூலபத்திரங்களை நாங்கள் பார்த்தோமா என்றால் ஞாபகமில்லை. நான் கிரையம் வாங்கும் போது முறையாக வில்லங்கம் போட்டு பார்த்திருந்தால் மனு சொத்தின் உண்மையான உரிமையாளர் பற்றி தெரிய வந்திருக்கும் என்றும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இந்த விபரத்தை மறைத்து கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது பூர்வீக ஊர் சாத்தூர். நான் சத்திரரெட்டியபட்டி கிராமத்தில் 2018 ல் இருந்து குடியிருந்து வருகிறேன். எனது பூர்வீக ஊர் சாத்தூர் என்பதால் மனு சொத்தின் பூர்வீகம் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மனு சொத்தை பற்றி விபரம் எனக்கு தெரியாததால் வில்லங்கம் போட்டு தான் கிரையம் வாங்கிருக்க வேண்டும் என்று சொன்னால் வில்லங்கம் போட்டு பார்த்தோம். என்னிடம் காட்டப்படும் ரீ–சர்வே ரீ–செட்டில்மெண்ட் பைசலாதி ரிஜிஸ்டரின் (ஜெராக்ஸ்) சர்வே எண். 374 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பரமன் என்பவர் பெயரில்

உள்ளது. இந்த ஆவணத்தை பார்த்து நான் கிரையம் வாங்கவில்லை என்றால் அரசிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளதால் நாங்கள் பார்க்கவில்லை. நான் கிரையம் பெறும் முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மனு சொத்தினை வேல்முருகன் என்பவரிடம் இருந்து கையகபடுத்தியது. மனு சொத்தை பொறுத்து உண்மையான உரிமையாளர் வேல்முருகன் இல்லை என்றும், வாதி, பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் வீடு கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். நான் மனு சொத்தை உண்மையான உரிமையாளரிடம் வாங்காமல் சட்ட விரோதமாக கையகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கிரையம் பெற்றுள்ளதால் நான் வாங்கிய கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கும் முன்பே நீதிமன்றத்தில் முதல் நிலை மற்றும் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் தாவா சொத்து சம்மந்தமாக நான் தனியாக தான் வழக்கு தாக்கல்செய்து பரிகாரம் கோர முடியும் என்றும், நிறைவேற்றுதல் மனுவில் நடவடிக்கைகளில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனு சொத்தை செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் ஆவணங்களின் படி வாதி, பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்பதால் நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்திய 1992 நடவடிக்கைகளும் சட்டவிரோத நடவடிக்கை என்றால் சரியல்ல. மனுவில் சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 76 செண்ட் என்றால் சரிதான். மேற்படி விஸ்தீரணத்தில் நாங்கள் கிரையம் பெற்ற விஸ்தீரணமானது எவ்வளவு என்றால் 5 1/4 செண்ட். நாங்கள் கிரையம் வாங்கும் போது மேற்படி சர்வே எண். 374 ஐ எந்த உட்பிரிவு செய்து தான்

கொடுத்தார்களா என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும். நான் தாக்கல் செய்துள்ள எனது கிரைய ஆவணத்தில் 25.4.1981ம் தேதி தீர்மானம் 120 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி தீர்மானம் சம்மந்தமாக நான் தெரிந்து கொண்டேனா என்றால் அதை பற்றி எனக்கு புரியவில்லை, அதனால் நான் தெரிந்து கொள்ளவில்லை. நான் கிரையம் வாங்கும் போது அந்த தீர்மானம், மனு சொத்தின் மூல ஆவணங்களை நான் வாங்கினேனா என்றால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் இருந்து எனக்கு எதுவும் வழங்கப்படவில்லை. நான் கிரையம் பெற்ற மனு சொத்து உண்மையான உரிமையாளர்களிடம் இருந்து கிரையம் பெறவில்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள மனு சொத்தின் உரிமை எனக்கு எந்தவிதத்திலும் உரிமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உரிமை பிரச்சனை இருப்பதால் விளம்புகை பரிகாரம் கோராமல் நிறைவேற்றுதல் மனுவில் இருந்து விடுவிக்கக்கோருவதால் நான் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியான மனு அல்ல என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.